பக்கங்கள்: 09 விலை : 20/-

# காலைக்கதிர்

Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 வைகாசி 20 செவ்வாய்க்கிழமை 02.06.2020 கதிர் 77

## இனி தேர்தல் ஓகஸ்ட்டில்!

கொழும்பு, ஜூன் 02

தேர்தல்கள் ஆணைக்குழு ஜூன் மாதம் 20ஆம் திகதி பொதுத் தேர்தலை நடத்துவது என்று அறிவித்து விடுத்த வர்த்தமானி அறிவித்தலைச் சவாலுக்குட்படுத்திய அடிப்படை உரிமை மீறல் மனுக்களை உயர் நீதிமன்றம் இன்று பிற்பகல் விசாரணைக்கு ஏற்க மறுத்தமையை அடுத்து ஓகஸ்ட் முதல் வாரம் அல்லது இரண்டாம் வாரத்தில் பொதுத் தேர்தலுக்குத் திகதியிடப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

2

## நாட்டில் அதிகரிக்கிறது டெங்கு, எலிக்காய்ச்சல்!

கொழும்பு, ஜூன் 02

இலங்கையின் பல பகுதிகளில் டெங்கு மற்றும் எலிக் காய்ச்சல் அதிகரித்துள்ளதாக தொற்றுநோயியல் பிரிவு எச்சரித்துள்ளது.

கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போதுஇந்தஆண்டின்முதல்காலாண்டில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளபோதிலும், டெங்கு பரவுவதில் அதிகரிப்பு இருப்பதாக மருத்துவர்கள் கூறுகின்றனர்.

கொரோனா முடக்க காலத்தில், பொதுமக்கள் வீடுகளில் இருந்து தமதுசுற்றுப்புறங்களையும்,தோட்டங்களையும் சுத்தமாக வைத்திருந்தது, டெங்கு கட்டுப்பாட்டுக்குக் காரணங்களில் ஒன்று.

மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தைக் கட்டுப்படுத்தியது மற்றொரு காரணியாகும்.

தலைமை தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர கூறுகையில் -

மக்கள் தங்கள் சாதாரண கடமைகளுக்குத் திரும்புவதன் விளைவாக டெங்கு பரவுவதற்கான அபாயம் அதிகரித்துள்ளது - என்றார்.

மேல் மாகாணத்திலேயே அதிகளவான டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இருப்பினும், இலங்கையின் ஒவ்வொரு மாவட்டத்திலும் டெங்கு ஏற்படும் அபாயம் உள்ளது.

இதேவேளை, கொரோனா தடுப்பு நடவடிக்கை காலத்தில் பலரும் விவசாயத்தில் ஆர்வம் காட்டியதால் எலிக் காய்ச்சல் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாகச் சுகாதார

2

## தம்புள்ளை விபத்தில் இரு சிப்பாய்கள் உயிரிழப்பு!

கொழும்பு, ஜூன் 02

தம்புள்ளை - தமனயாய பகுதியில் இன்று செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில், இராணுவச் சிப்பாய்கள் இருவர் உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் லுணுகல மற்றும் கல்தொட்ட பிரதேசங்களைச் சேர்ந்த 27, 28 வயதுடைய இராணுவச் சிப்பாய்களே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

2

## குரும்பசிட்டி கிணறொன்றில் பெரும் தொகை ஆயுதங்கள்!

### மீட்புப் பணிகள் தொடர்கின்றன



யாழ்ப்பாணம், ஜூன் 02

பலாலி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட குரும்பசிட்டியில் தனியார் காணி ஒன்றின் கிணற்றுக்குள் இருந்து ஒரு தொகுதி வெடிபொருள்கள் காணப்பட்டதை அடுத்து நீதிமன்ற உத்தரவுக்கு அமைய இன்று அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன்போது பெருமளவான

2

## கலைப்புக்கு எதிரான மனுக்களை விசாரணைக்கு ஏற்க மன்று மறுப்பு

### ஐந்து நீதியரசர்கள் ஆயம் ஏகமனதாக இன்று முடிவு

கொழும்பு, ஜூன் 02

நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிரான ஏழு அடிப்படை உரிமை மீறல் மனுக்களையும் விசாரணைக்கு ஏற்றுக் கொள்வதில்லை என்ற முடிவை பிரதம நீதியரசர் உட்பட ஐந்து நீதியரசர்களைக் கொண்ட உயர்நீதிமன்ற ஆயம் இன்று ஏகமனதாக எடுத்து அறிவித்தது.

எனினும், இந்த விடயத்தை ஒட்டி எதிர்மனுதாரர்களினாலும் பிற தரப்புகளினாலும் முன்வைக்கப்பட்ட சகல ஆட்சேபனைகளும் பெரும்பான்மை முடிவின் அடிப்படையில் நிராகரிக்கப்படுகின்றன என்னும் நீதிமன்றம் அறிவித்தது.

2

## பொதுப் போக்குவரத்து திங்கள் முதல் வழமைக்கு

கொழும்பு, ஜூன் 02

கொரோனா பெருந் தொற்றால் பாதிக்கப்பட்ட பொதுப் போக்குவரத்து மே 8ஆம் திகதி திங்கட்கிழமை முதல் வழமைக்குத் திரும்பும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஊரடங்கு தளர்த்தப்பட்ட நிலையில் பொதுமக்களின் நடத்தை குறித்து மீளாய்வு செய்த பின்னரும் சுகாதாரத் துறையினரின் வழிகாட்டுதல்களின் அடிப்படையிலும் இந்த முடிவு

2

## ஜனநாயகத்துக்கான போராட்டம் தொடரும் என்கின்றார் சுமந்திரன்

கொழும்பு, ஜூன் 02

"நாடாளுமன்றக் கலைப்புக்கு எதிரான வழக்கில் உயர் நீதிமன்றத்தின் முடிவு எப்படி அமைந்தாலும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான போராட்டம் தொடரும்" - நேற்றுப் பிற்பகல் உயர்நீதிமன்றம் தனது முடிவை அறிவித்த பின்னர் நீதிமன்ற வளாகத்தில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளிக்கையில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் இவ்வாறு கூறினார்.

2

## வாக்குச்சீட்டு அச்சிடும் பணி இன்று உடனே தொடங்கியது

பொதுத் தேர்தலுக்கான 17 மில்லியன் வாக்குச் சீட்டுகளையும் அச்சிடும் பணிகள் இன்று உடனடியாகத் தொடங்கியதென அரச அச்சக பணிப்பாளர் கங்கனி லியானகே தெரிவித்தார்.

வாக்குச் சீட்டுக்களுக்கான கணினி வடிவமைப்புப் பணிகள் கடந்த வாரத்திலேயே மேற்கொள்ளப்பட்டு விட்டன எனத் தெரிவித்தஅவர், பின்னர் அதிகாரப்பூர்வ அச்சிடுதல் இன்று தொடங்கியதாகவும் கூறினார்.

நாடாளுமன்றக் கலைப்பு மற்றும் ஜூன் 20ஆம் திகதி பொதுத் தேர்தல் என்கிற அறிவிப்பு என்பவற்றைச் சவாலுக்குட்படுத்திய மனுக்களை உயர் நீதிமன்றம்

2

## கடற்படை முன்னாள் தளபதி என்னைக் கொல்லப் பார்த்தார்

### 'அவன்கார்ட்' நிறுவனத் தலைவர் குற்றச்சாட்டு

இலங்கைக் கடற்படையின் முன்னாள் தளபதி ரவீந்திர விஜேகுணரத்ன தன்னிடம் பணம் பறிக்க முயன்றார் என்றும் தன்னைக் கொலை செய்வதற்கு முயற்சித்தார் என்றும் குற்றஞ்சாட்டியிருக்கிறார் அவன்கார்ட் நிறுவனத்தின் தலைவர் நிசங்க சேனாதிபத்

2

## வாக்குச்சீட்டு அச்சிடும் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இன்று பிற்பகல் தள்ளுபடி செய்த தைத் தொடர்ந்து வாக்குச் சீட்டு அச்சிடும் பணிகள் உடனடியாகத் தொடங்கப்பட்டுள்ளன.

முன்னதாக ஜூன் 20ஆம் திகதி தேர்தல் நடத்துவதற்கு ஏதுவாக 17 மில்லியன் வாக்குச் சீட்டுகளை அச்சடிப்பதற்கான உத்தரவை தேர்தல்கள் ஆணைக்குழு அரச அச்சகத்திற்கு அனுப்பியிருந்தது.

## ஜனநாயகத்துக்கான ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இந்த வழக்கில் நாம் இரண்டு பிரதான கோரிக்கைகளை முன்வைத்தோம்.

ஒன்று - ஜூன் 20 ஆம் திகதி தேர்தல் நடத்தும் அறிவிப்பு தவறானது என்பது.

அடுத்தது-நாடாளுமன்றம்கலைத்து மூன்று மாதங்களாகியும் புதிய நாடாளுமன்றம் கூட முடியாத காரணத்தினால் நாடாளுமன்றக் கலைப்புப் பிரகடனம் செல்லுபடியற்றது என்பது.

முதலாவது விடயத்துக்கு வழக்கு விசாரணை ஆரம்பித்து முதல் நாளிலேயே முடிவு எட்டி விட்டது. ஜூன் 20 ஆம் திகதி தேர்தல் நடத்தப்படமாட்டாது என்று அறிவிக்கப்பட்டு விட்டது.

இரண்டாவது விடயம் தொடர்பில் வழக்கைத் தொடர்ந்து கொண்டுசெல்ல முடியாத வகையில் நீதிமன்றம் முடிவு செய்து அறிவித்துள்ளது.

எனினும் ஜனநாயகத்துக்கான எமது போராட்டம் தொடரும். - என்றார்.

## இனி தேர்தல் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நீதிமன்றத் தீர்ப்புத் தொடர்பாக ஆராய்வதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள் நாளை கொழும்பில் கூடவுள்ளனர்.

அவர்கள் இன்று கூடுவர் என்று அறிவிக்கப்பட்டிருந்தபோதும் நீதிமன்றத்தின் முடிவின் பின்னர் நாளையே ஆணைக்குழுஉறுப்பினர்களின்கூட்டம் நடக்கும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் புதிய தேர்தல் திகதி முடிவு செய்யப்பட்டு அறிவிக்கப்படும் என்று தெரிகின்றது.

நீதிமன்றத் தீர்ப்பு சாதகமாக வந்தாலும் ஜூன் 20ஆம் திகதி தேர்தலை நடத்துவதற்கான சாத்தியங்கள் ஏதுமில்லை என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்மஹிந்ததேசப்பிரியஏற்கனவே தெரிவித்திருந்தார்.

நீதிமன்றத்தின் முடிவையொட்டி புதிய தேர்தல் திகதியொன்று அறிவிக்கப்படும் என்று அவர் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்தபோதும் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், பொதுத் தேர்தலை நடத்துவதற்கான ஏற்பாடுகளைக் கவனிக்கக் குறைந்தபட்சம் 35 நாள்கள் தேவை என்ற அடிப்படையில் பொதுத் தேர்தல் திகதி ஓகஸ்ட் மாதத்தில் நடத்தப்படுவதற்கான சாத்தியங்கள் அதிகமாக இருக்கின்றன என்று தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்களுக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

## தம்புள்ளை விபத்தில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அந்தப் பகுதியில், மோட்டார் சைக்கிளொன்றும், தனியார் பஸ்ஸொன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகப் பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

மேலும் சம்பவம் தொடர்பில் பஸ் சாரதியைக் கைது செய்து, மேலதிக விசாரணைகளை பகமூண பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# சாவகச்சேரி பொலிஸ் அதிகாரியை கைது செய்வது பற்றி நாளை முடிவு

சாவகச்சேரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகரைக் கைது செய்வதா இல்லையா என்பது தொடர்பான முடிவை கொழும்பு மேலதிக நீதிவான் மன்றம் நாளை அறிவிக்கவுள்ளது.

முன்னாள் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் வாகனம் விபத்தில் சிக்கிய வழக்கு ஒன்று தொடர்பில் நீதிவானின் உத்தரவைப் பெற்று அவரைக் கைது செய்யுமாறு சட்ட மா அதிபர் டபுள்ள டி லிவேரா வழங்கிய அறிவுரைக்கமைய குற்றப் புலனாய்வுத் திணைக்களம் இன்று கொழும்பு நீதிவான் மன்றத்தில் நகர்த்தல் பத்திரம் முன்வைத்தது.

அதனை விசாரித்த நீதிவான் அதன் மீது நாளை முடிவைத் தெரிவிப்பார் எனக் கூறியுள்ளார்.

2016ஆம்ஆண்டுமுன்னாள்அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் வாகனத்துடன் இரு இளைஞர்கள் பயணித்த மோட்டார் சைக்கிள் விபத்துக்குள்ளானது. அந்த வாகனத்தை அமைச்சரே செலுத்தி வந்தார் என்று குற்றஞ்சாட்டப்படபோதும் அடுத்த நாள் அந்த வாகனத்தைச்செலுத்திவந்தார்என்றுஅமைச்சரின் சாரதி ஒருவர் பொலிஸில் சரணடைந்தார்.

இந்தச்சம்பவம்நடந்தபோது வெலிக்கட பொலிஸ் நிலைய குற்றப் பிரிவு பொறுப்பதிகாரியாக இருந்த சுதத் அஸ்மடல போலியான சாட்சிகளைச் சோதித்தார் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. தற்போது அவர் சாவகச்சேரி உதவிப் பொலிஸ் அத்தியட்சகராக க்கடமையாற்றுகிறார்.

இதற்காகவே அவரைக் கைது செய்து விசாரிக்கும்படி சட்ட மா அதிபர் கொழும்பு குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸாருக்கு அறிவுறுத்தியிருந்தார்.

அதன்படி இன்று கொழும்பு மேலதிக நீதிவான் மன்றில் தேவையான தகவல்களை வழங்கி அவரைக் கைது செய்வதற்கான ஆணையைத் தரும்படி கேட்டனர்.

அதன் மீதான முடிவு நாளை அறிவிக்கப்படும் என்று நீதிவான் தெ ரிவித்தார்.

இந்தவழக்குக்காகமுன்னாள்அமைச்சர் சம்பிக்க ரணவக்க 2019 டிசெம்பர் 18ஆம் திகதி கைது செய்யப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டார்.

## கடற்படை முன்னாள் தளபதி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கடற்படைத் தளபதி மறைமுகமாக என்னிடம் பணம் பறிக்க முயன்றார் என்று நான் நம்புகின்றேன். அவர் என்னைக் கடுமையாக விமர்சித்திருக்கிறார். 2015 டிசெம்பர் 31ஆம் திகதி ஆயுதம் தாங்கிய இரு காவலர்களை எனது வீட்டிற்கு அனுப்பியிருக்கிறார். வீட்டில் சிசிடிவி பொருத்தப்பட்டிருந்த தாலும் என்னுடைய பாதுகாப்புக்குத் தனிப்பட்டகாவலர்கள்இருந்தார்கள்என்பதாலும் என்றுடைய உயிர் அன்று காப்பாற்றப்பட்டது. இல்லையென்றால் அட்மிரல் ரவீந்திர விஜேவர்த்தன என்னை அன்று கொலைசெய்திருப்பார்என்றுதெரிவித்தார் நிசங்க.

அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பாக விசாரணைசெய்யும்ஜனாதிபதிஆணைக்குழுவின் முன்பாக இன்று சாட்சியமளித்துவிட்டு வெளியேறிய நிசங்க, செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

முன்னாள் கடற்படைத் தளபதியின் செயல்தொடர்பில்தான்மீரிகானபொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்த போதும் எவரும் அதன் மீது நவடிக்கை எடுக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இது குறித்து நான் தற்போதைய பொலிஸ் மா அதிபருக்கும் பொலிஸ் ஆணைக்குழுவிற்கும் தெரியப்படுத்தியிருக்கின்றேன். என்னைக் கொல்வதற்காக கடற்படைத் தளபதியின் இரு தலைமைப் பாதுகாவலர்கள் துப்பாக்கிகளுடன் சைக்கிளில் எனது வீட்டின் அருகே நிற்கும் சிசீரிவி வீடியோ ஆதாரத்துடன் எழுத்து மூல முறைப்பாட்டை இன்று ஆணைக்குழுவிடம் வழங்கியிருக்கின்றேன் என்றும் நிசங்க தெரிவித்தார்.

நிசங்க குற்றஞ்சாட்டும் கடற்படையின் முன்னாள் தளபதியும் படைகளின் முன்னாள் பிரதானியுமான அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன மீது, 11 தமிழ் மாணவர்களைக் கடத்திக் கொலை செய்த வழக்கின் முதன்மைச் சந்தேகநபர் நீதிமன்ற விசாரணைகளில் இருந்து தப்பிச் செல்வதற்கு உதவினார் என்றும் அந்த வழக்கின் சாட்சிகளுக்கு இடைஞ்சல்களை ஏற்படுத்தினார் என்றும் குற்றஞ்சாட்டப்பட்டவர்.

நல்லாட்சி அரசின் காலத்தில் கடற்படைத் தளபதி மீது இந்தக் குற்றச்சாட்டுக்கள் எழுந்தபோது, அவரைப் போர்களமாடிய வீரமகனாகச் சித்திரித்த ராஜபக்ஷ அணியினர் மக்களுக்காகப் போராடிய ஒருவர் துன்புறுத்தப்படுகின்றார் என்று கண்ணீர் வடித்தனர்.

இப்போது ராஜபக்ஷாக்களுக்கு நெருக்கமானவராக அறியப்படும் நிசங்கவே கடற்படையின் முன்னாள் தளபதி மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்துள்ளார்.

## குரும்பசிட்டி ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

கடந்த சில நாள்களுக்கு முன்னர் குரும்பசிட்டி அம்மன் கோவிலுக்கு அண்மையில் உள்ள தனியார் காணி ஒன்றின் கிணற்றினுள் ஒரு தொகுதி வெடிபொருட்கள் காணப்பட்டன. இது குறித்து பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.

பொலிஸார் மல்லாகம் நீதிமன்றத்தின் கவனத்துக்குவ கொண்டுவந்தனர். இதற்கமைய இன்று நீதிமன்ற அனுமதியுடன் அகழ்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது பெருமளவான வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளதுடன் மேலும் ஆயுதங்கள் காணப்படுவதாகவும், தொடர்ந்தும் மீட்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவித்தன.

## நாட்டில் அதிகரிக்கிறது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

நெல் வயல்களில் வேலை செய்யும் விவசாயிகள் இது குறித்து அதிக கவனம் செலுத்தவேண்டும் என்று தலைமை தொற்றுநோயியல் நிபுணர் வைத்தியர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

## கலைப்புக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய, நீதியரசர்கள் புவனேக அலுவிகாரை, சிசர ஸ்ரீ ஆப்ரூ, பிரியந்த ஜயவர்த்தன, விஜித் மலல் கொட ஆகியோர் கொண்ட ஆயமேஇந்தமுடிவைநேற்றுஅறிவித்தது.

இந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா என்பது தொடர்பான விசாரணை பத்து நாள்கள் நடைபெற்று நேற்று முடிவடைந்தது.

இன்று பிற்பகல் 3 மணிக்கு கூடிய நீதிமன்றம் தன்னுடைய முடிவை 57 செக்கன்களில் அறிவித்தது.

இந்த முடிவுக்கான காரணம் ஏதும் உடனடியாகமுன்வைக்கப்பட்டவில்லை. காரணங்கள் அடங்கிய விளக்க உத்தரவு பின்னர் வெளியிடப்படுமா என்பதும் கூட நேற்று அறிவிக்கப்படவில்லை.

இந்தஅடிப்படைஉரிமைமீறல்மனுக்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட எல்லா ஆட்சேபனைகளும் பெரும்பான்மை முடிவின் அடிப்படையில் நிராகரிக்கப்படுவதாக அறிவித்த ஆயம், ஆனால் என்ன காரணத்துக்காக மனுக்கள் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படுகின்றன என்ற காரணத்தை வெளிப்படுத்தவில்லை. எனினும் அந்த முடிவு ஆயத்தின் ஏகமனதான தீர்மானம் என்பதும் அறிவிக்கப்பட்டது.

# நிறுத்தப்பட்ட வட்டியை அறவிடும் தீவிர முயற்சியில் வணிக வங்கிகள்

கொழும்பு, ஜூன் 02

கொரோனா நிவாரணமாகக் கடனுக்கான வட்டி அறவிடுவதை நிறுத்துமாறு வழங்கப்பட்ட உத்தரவை நிறுத்தி மீண்டும் வட்டியை அறவிட அனுமதி வழங்குமாறு வணிக வங்கிகள், இலங்கை மத்திய வங்கியிடம் கோரிக்கை விடுத் துள்ளன.

கடனுக்காக வட்டியில் ஒரு பகுதியையாவது அறவிட இடமளிக்குமாறு வங்கியாளர்கள் இரண்டு வாரங்களுக்கு முன்னர் மத்திய வங்கியிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

கடன்களுக்கான வட்டி அறவிடப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்ட காரணத்தினால், வங்கிகளின் வட்டி வருமானம் பாதியாக குறைந்துள்ளதாக வணிக வங்கிகள் சுட்டிக்காட்டியுள்ளன.

இந்த வட்டியை மீண்டும் அறவிடுவது குறித்து வணிக வங்கிகள், மத்திய வங்கிகளுடன் பேச்சு நடத்தி வருவதுடன் ஒரு வாரத்திற்குள் தமது கோரிக்கைக்கு சாதகமான பதில் கிடைக்கும் என எதிர்பார்த்துள்ளன.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக தெரிவு செய்யப்பட்ட தொழிற்துறை மற்றும் நபர்களுக்காக இலங்கை மத்திய வங்கி கடந்த மார்ச் மாதம் நிவாரணப் பொதி ஒன்றை அறிமுகப்படுத்தியது.

மார்ச் 24ஆம் திகதி சம்பந்தப் பட்ட நிவாரண யோசனைகளை உள்ளடக்கி சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டிருந்த மத்திய வங்கி, சுற்றுலா, ஆடை உற்பத்தி, பெருந் தோட்டம், தகவல் தொழிநுட்பம், சுயத்தொழில், சிறிய மற்றும் மத்திய தர வர்த்தகங்களுக்கு நிதி சலுகையை வழங்குமாறு வணிக வங்கிகளுக்கு உத்தரவிட்டிருந்தது.

## பொதுப் போக்குவரத்து ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எடுக்கப்பட்டிருப்பதாக பயணிகள் போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சு தெரிவித்தது.

கொரோனா பெருந்தொற்று ஏற்படுத்தியிருக்கும் கள நிலமைகளால் சுகாதார அறிவுறுத்தல்படி பேருந்துகளின் இருக்கைகளுக்குத் தக்க பயணிகள் மட்டுமே ஏற்றிச்செல்லப்படமுடியும்என்று அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்தார்.

எம்மிடம் 5 ஆயிரத்து 300 போக்குவரத்துச் சபை பஸ்களும் 23 ஆயிரம் தனியார் பஸ்களும் உள்ளன. ஆனால், அவற்றின் இருக்கைகளுக்குத் தக்க பயணிகள் மட்டுமே பயணிக்க முடியும் என்பதைக் கட்டாயப்படுத்தினால், முழுமையான சேவையை வழங்குவது பெரும் சவாலுக்குள்ளாகும் என்றும் அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் - சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com


## தமிழர் திட்டம்தான் என்ன?

வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானம் ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார். கடந்த எழுபது ஆண்டு கால அரசியல் போக்கின் பட்டறிவினால் தமிழர்களுக்குக் கிடைத்த பாடத்தை அவர் விவரித்திருக்கின்றார்.

ஆனால், அந்த அனுபவப் பாடத்தில் இருந்து அடுத்த கட்டத்துக்கு நாம் எப்படி நகர்வது என்பதுதான் இப்போது நம் முன் உள்ள கேள்வியாகும்.

“சிங்களத் தலைவர்கள் எவராக இருந்தாலும் – அது மஹிந்தவாகவோ, ரணிலாகவோ, ஜெயவர்த்தனவாகவோ இருக்கலாம் – எவரொருவரும் எங்களுக்குத் தீர்வை இணங்கித் தருவார்கள் என்று எமக்கு நம்பிக்கை இல்லை. அவர்கள் அப்படித் தருவார்கள் என்று எந்தக் காலத்திலும் நாம் எதிர்பார்க்கவும் முடியாது” – என்று அவர் கூறியிருப்பது முற்றிலும் சரியான கூற்று. அதுதான் நாம் கற்றுக் கொண்டுள்ள படிப்பினை.

அப்படியானால், இந்த அரசியல் முடக்க நிலையிலிருந்து நாம் முன்நகருவது எப்படி? அதற்கும் சி.வீ.கே. சிவஞானம் ஒரு விளக்கம் தருகின்றார்.

“சிங்களத் தலைவர்கள் தரமாட்டார்கள் என்பதற்காக நாம் வாளாவிருக்க முடியாது. முயற்சிக்க வேண்டும். அந்த முன்னெடுப்புகள் தொடரும்; தொடர வேண்டும். எனவே மெல்ல, மெல்ல மாற்றங்கள் ஏற்படும். ஏற்பட வேண்டும்.” – என்றுரைக்கின்றார் அவர்.

அவர் உரைப்பது சரி. ஆனால் நாம் அப்படிச் செயற்படகின்றாமோ, முயற்சிக்கின்றோமா, முன் நகருகின்றோமா என்பதுதான் இங்கு பிரதான கேள்வி.

“1956 இல் சிங்கள மாத்திரம் என்று சட்டம் கொண்டு வந்த பண்டாரநாயக்கா பின்னர் 1958 இல் படிப்படியாக மாற்றங்களைக் கொண்டு வந்தார். தமிழும் இன்றைக்கு உத்தியோகபூர்வ மொழியாக இருக்கின்றது” – என்று உதாரணம் காட்டுகின்றார். ஆனால் அந்த உதாரணம் இப்போது பொருந்துமா என்பதே வினா.

1985 இல் திம்புப் பேச்சில் – தமிழர் தனியான இனம், அவர்களுக்குத் தனியான தாயகம் உண்டு, அந்த இனத்துக்கு சுய நிர்ணய உரிமை உள்ளது என்ற – மூன்று பிரதான கோட்பாடுகள் தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட போது அதனை அப்போதைய ஜெயவர்த்தன அரசு அடியோடு நிராகரித்தது. ஆனால் அடுத்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை – இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டமை மூலம் தமிழர் தனியான இனம், வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகம் என்ற கேட்பாட்டை ஜெயவர்த்தன அரசு ஏற்று அங்கீகரித்தது.

அதற்குப் பின்னர் 15 ஆண்டுகள் கழித்து ஒஸ்லோ உடன்பாட்டுக்கு இணங்கியமை மூலம் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை அங்கீகரித்தது இலங்கை.

இப்படித் தமிழர்களுக்குத் தாம் வழங்க மறுத்த விடயங்களில் இருந்து பண்டாரநாயக்களும், ஜெயவர்த்தனாக்களும், விக்கிரமசிங்கக்களும் இறங்கி வந்த வரலாறு உண்டு.

ஆனால், அந்த வழி முறையை இப்போது நம்பிப் பயனில்லை என்பதுதான் உண்மை, யதார்த்தம், நிஜம் எல்லாமுமே.

பண்டாரநாயக்கா தனி சிங்களச் சட்டத்தைக் கொண்டு வந்தபோது அதற்கெதிராகக் கிளர்ந்தெழுவதற்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி, காத்திரமாகப் பங்களித்தது. பல்வேறு மாவட்டங்களில் உள்ள தமிழ் மக்களின் தமிழ்த் தேசிய உணர்வைத் தட்டி எழுப்பி, எல்லோரையும் ஒன்று திரட்டி, ஒரு வலுவான தேசிய இயக்கமாக உருவெடுத்துத் தமிழின எதிர்ப்பை ஒன்றுபட வெளிப்படுத்தி நின்றது.

அது போலத்தான் 1985 இல் திம்புப் பேச்சில் மறுத்த அடிப்படைக் கோட்பாடுகளை அதே ஜெயவர்த்தனா அரசையும், தொடர்ந்து சந்திரிகா – ரணில் அரசையும் பின்னர் ஏற்றுக் கொள்ள வைப்பதற்குத் தமிழப் போராளிகளின் – குறிப்பாக விடுதலைப் புலிகளின் – அதிதீவிரப் போராட்டம் காரணமாக அமைந்தது.

அதாவது, சி.வீ.கே. சிவஞானம் கூறுவது போல ‘மயிலே மயிலே இறகு போடு என்றால் அது போடாது’ என்பது உண்மை தான். கடந்த காலங்களிலும் மயிலிறகைப் பிடுங்கித்தான் எடுக்க வேண்டியது.

அவை எவையும் இலகுவில் கிடைத்தவையல்ல. அவற்றுக்காகக் காத்திரமான போராட்டங்களையும் தந்தையும், தலைவனும் முன்னெடுத்தார்கள்.

ஆனால், இப்போது ‘மயிலே, மயிலே இறகு போடு!’ என்று தானே கேட்டுக் கொண்டிருக்கின்றோம்…!

அதற்கு அப்பால் என்ன செய்கிறோம்? என்ன திட்ம் எங்களிடம் இருக்கின்றது? ஏதாவது உருப்படியான வழிகாட்டுப் பாதை ஏதும் எம்மிடம் உண்டா? தேர்தலில் வாக்களியுங்கள், அதிக ஆசனங்களைத் தாருங்கள்!’ என்ற கோஷ்த்தைத் தவிர வேறு நேர்த்தியான திட்டம் ஏதும் ஏதேனும் எங்களிடம் உள்ளதா?

எந்தத் திட்டமும் எந்தத் தமிழர் தரப்பிடமும் இல்லை. பழம் புராணம் பேசி ‘மந்திரத்தால் மாங்காய் பறிப்போம்’ என்று சவடாற் பேச்சு பேசுவதைத் தவிர.

பண்டாரநாயக்காக்களையும், ஜெயவர்த்தனாக்களையும் வழிக்குக் கொண்டு வர ஏதோ வகையிலான துரும்பு தமிழரிடம் இருந்தது. ராஜபக்ஷக்களை வழிக்குக் கொண்டு வர ஏதேனும் துரும்பு தமிழரிடம் உள்ளதா? இன்று வரை இல்லை என்பதுதான் விசனத்துக்குரிய உண்மை.

## கல்முனை உப பிரதேச செயலக ஆலய வழக்கு இன்று தள்ளுபடி



கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஆலயத்தை அங்கிருந்து அகற்றவேண்டும் என்று தெரிவித்து கல்முனை நகர சபையால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை கல்முனை நீதிவான் நீதிமன்று தள்ளுபடி செய்துள்ளது.

இன்று வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது நீதிவான் தர்மலிங்கம் கருணாகரன் வழக்கை விசாரித்து மனுவில் உள்ள குறைபாடு காரணமாக வழக்கைத் தள்ளுபடி செய்தார்.

கல்முனை வடக்கு பிரதேச செயலக ஆலயம் சார்பாக பிரதேச செயலாளர் ரி.ஜே அதிசயராஜ் மன்றில் ஆஜராகியிருந்தார். சட்டத்தரணிகளான ந.சிவரஞ்சித், மதிவதணன் ஆகியோரும் ஆஜராகியிருந்தனர்

கல்முனை வடக்கு உப பிரதேச செயலகத்தில் நீண்டகாலமாக ஊழியர்களால் வழிபட்டு வரப்படும் விநாயகர் ஆலயம் சட்ட அனுமதிகள் எவையும் பெறப்படாது சட்டத்துக்குப் புறம்பாக் கட்டப்பட்டதாக் கூறி கல்முனை நகர சபை இந்த வழக்கைத் தாக்கல் செய்திருந்தது.

## கிரிக்கெட் வீரர் மதுஷங்கவின் தடுப்புக்காவல் நீடிப்பு!

ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கைதுசெய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த இலங்கையின் வேகப் பந்து வீச்சாளர் ஹெரான் மதுங்கவை எதிர் வரும் ஜூன் 9 ஆம் திகதி வரை விளக்க மறிய லில் வைக்குமாறு குளியாப்பிட்டி நீதிவான் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

அண்மையில் மதுங்காவும் அவரது நண்பரும் கும்மபதியாவில் உள்ள பம்மன்னாவிலிருந்து குளியாப்பிட்டிக்குச் சென்று கொண்டிருந்தபோது கைது செய்யப்படட்டிருந்தனர். கைது செய்யப்பட்ட வேளையில் மதுங்காவிடம் இருந்து 2.7 கிராம் ஹெரோயினும், அவரது நண்பரிடமிருந்து 2.8 கிராம் ஹெரோயினும் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

சம்பவத்தையடுத்து, இலங்கை கிரிக்கெட் மதுங்கவை தடை செய்திருந்தது.

## மட்டக்களப்பில் கொரோனா பாதித்த மக்களுக்கு உதவிகள்

மட்டக்களப்பு, ஜூன் 02

நாடளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் தொற்றுக் காரணமாக வாழ்வாதாரத்தை இழந்துள்ள குடும்பங்களுக்கு மட்டக்களப்பு ஞானம் அறக்கட்டளையினால் மட்டக்களப்புமாவட்டத்தில் உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் மற்றும் கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட மக்களுக்கு செயலக கேட்போர் கூடத்தில் இன்று செவ்வாய்க்கிழமை இந்த உதவிப் பொருள்கள் வழங்கி வைக்கப் பட்டன.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 150 குடும்பங்களுக்கும், கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட 100 குடும்பங்களுக் குமாக ஆயிரத்து ஐநூறு ரூபாய் பெறுமதியான 250 உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் திருமதி. நிஹாரா மௌஜத், மட்டக்களப்பு ஞானம் அறக்கட்டளை அமைப்பின் திட்ட உத்தியோகத் தர்களான ஆர்.சாந்தசீலன், வி.ஹஸ்ஸான், செயலக உத்தியோகத்தர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## 15 வயது மாணவியை வன்புணர்ந்த பஸ் நடத்துநருக்கு 30 வருடச் சிறை

கொழும்பு, ஜூன் 02

தான் கடமையாற்றிய பஸ்ஸில் பயணம் செய்த பாடசாலை மாணவியை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கிய பஸ் நடத்து நருக்கு 30 ஆண்டு கடூழியச் சிறைத் தண்டனை விதித்துள்ளது அனுராதபுரம் மேல் நீதிமன்றம்.

15 வயதுப் பாடசாலை மாணவியைத் திருமணம் செய்வதாக ஏமாற்றி பஸ், மற்றும் லொட்ஜ்களில் அவரைப் பல முறை பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கிய தனியார் பஸ் நடத்துனர் குற்றவாளியென நீதிமன்றம் அறிவித்தது.

மாணவிக்கு 5 இலட்சம் ரூபா இழப்பீடு வழங்கும்படியும், தவறினால் மேலும் 48 மாதங்கள் சிறைத்தண்டனை அனுபவிக்கும்படியும் நீதிபதி உத்தரவிட்டார்.

ஹொரவப்பொத்தானவிலிருந்து அநுராதபுரத்திற்கு சேவையில் ஈடுபட்ட தனியார் பஸ்ஸில் நடத்துநராகப் பணி புரிந்த திருமணமான நடத்துநருக்கே இந்தத் தண்டனை வழங்கப்பட்டது.

தான் திருமணமாகாதவர் என்றும், மாணவியைக் காதலிப்பதாகவும், திருமணம் செய்ய விரும்புவதாகவும் நடத்துநர் மாணவியிடம் பொய் கூறி ஏமாற்றி, பாலியல் வல்லுறவில் ஈடுபட்டிருந்தார்.

பஸ்ஸிலும், பல்வேறு இடங்களிலும் பல சந்தர்ப்பங்களில் அவர் பிரதிவாதியால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார் என்பதும் நீதிமன்றத்தில் தெரிய வந்தது.

அனுராதபுரம் போதனா மருத்துவமனையின் நீதித்துறை மருத்துவ அதிகாரி எச்.ஏ. கருணாதிலக உயர்நீதிமன்றத்தில் அளித்த மருத்துவ அறிக்கையில் குற் றம்சாட்டப்பட்டவர் சிறுமியைத் தீவிரமாகப் பாலியல் பலாத்காரம் செய்ததாகத் தெரிவித்தார்.

இந்த சம்பவம் குறித்த முதற்கட்ட விசாரணை கஹடகஸ்டிகிலிய பொலிஸாரால் நடத்தப்பட்டது. இந்த வழக்கின் ஆரம்ப விசாரணை கஹடகஸ்டிகிலிய சுற் றுலா நீதிவான் நீதிமன்றத்தில் நடை பெற்றது.

பின்னர், இலங்கை தண்டனைச் சட்டம் 364 (2) (இ) மற்றும் 354 பிரிவுகளின் அடிப்படையில் ஏப்ரல் 24, 2017 அன்று சட்டமா அதிபர் அநுராதபுரம் மேல் நீதிமன்றத்தில், நடத்துனருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

### மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினோ பாசோவின்

# கால்நடைச் சந்தையில் கண்மூடித்தமான சூடு

## 30 பேர் உயிரிழப்பு

மேற்கு ஆபிரிக்க நாடான புர்கினோ பாசோவில் உள்ள கால்நடைச் சந்தையில் நடந்த துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலில் 30 பேர் சாவடைந்தனர். அங்குள்ள கொம்பீங்கா என்ற இடத்தில் நேற்று முன்தினம் மதியம் இந்தச் சம்பவம் நடந்தது. மோட்டார் சைக்கிள்களில் துப்பாக்கி ஏந்தியவாறு வந்த நபர்கள் அங்கிருந்த வியாபாரிகள், வாடிக்கையாளர்களை நோக்கித் துப்பாக்கிச்சூடு நடத்தியதாகப் பன்னாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. தாக்குதல் நடந்த பகுதியில் பெரும் பதற்றம் நிலவுகிறது. தற்போது அங்கு பாதுகாப்பு படையினர் குவிக்கப்பட்டு விசாரணை நடத்தப்படுகிறது. இந்தத் தாக்குதலை நடத்தியது பயங்கரவாதிகள் என்று அந்த நாட்டு அரசு கூறியுள்ளது. அல்கொய்தா மற்றும் ஐ.எஸ். பயங்கரவாதிகள் ஆதரவு பெற்ற புர்கினோ பாசாவின் மத அடிப்படையிலான பயங்கரவாதிகள் அங்கு செயற்படுவது குறிப்பிடத்தக்கது. இருப்பினும் இந்தத் தாக்குதலுக்கு எந்தவொரு பயங்கரவாத இயக்கமும் பொறுப்பேற்கவில்லை.



## தமிழாய்வு நிறுவன பேராசிரியர் நியமனம் முடக்கத்துக்கு வழி

### ராமதாஸ் தெரிவிப்பு


செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முதல் இயக்குநராக உதவிப் பேராசிரியர் நிலையிலுள்ள ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது போதுமானது அல்ல என்று பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தெரிவித்தார். சென்னை, தரமணியில் உள்ள செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்துக்குப் பேராசிரியர் இரா.சந்திரசேகரன் மத்திய மனிதவள மேம்பாட்டுத்துறையால் நியமிக்கப்பட்டுள்ளார். இதுதொடர்பாகத் தனது கீச்சகப் பக்கத்தில் பதிவிட்ட பதிவு ஒன்றிலேயே ராமதாஸ் இவ்வாறு தெரிவித்தார். 'செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனத்தின் முதல் இயக்குநராக உதவிப் பேராசிரியர் நிலையிலுள்ள ஒருவர் நியமிக்கப்பட்டிருப்பது போதுமானது அல்ல. இது செம்மொழி தமிழாய்வு நிறுவனத்தில் தமிழாராய்ச்சியை ஊக்குவிக்க எந்த வகையிலும் உதவாது. செம்மொழி தமிழாய்வு மத்திய நிறுவனம் மத்திய பல்கலைக்கழகத்திற்கு இணையான அமைப்பு ஆகும். அதன் இயக்குநராக தமிழாராய்ச்சியில் அனுபவம் மிக்க தமிழறிஞர்களில் ஒருவரை நியமிப்பதுதான் பொருத்தமாக இருக்கும். தற்போதையநியமனம்தமிழாய்வு நிறுவனத்தை மேலும் முடக்குவதற்கு வழி வகுக்கும்' எனப் பதிவிட்டுள்ளார்.

## ஊரடங்கை விலக்கியதற்கு இம்ரான்கான் விளக்கம்



கொரோனா பரவலைத் தடுப்பதற்காக நடைமுறைக்கிடப்பட்டிருந்த ஊரடங்கு உத்தரவு விலக்கப்பட்டுள்ளதாகப் பாகிஸ்தானின் தலைமை அமைச்சர் இம்ரான் கான் தெரிவித்திருந்தார். இதன் காரணமாக இம்ரான் கான் விமர்சனத்துக்கு உள்ளாகினார். இந்த நிலையில் ஊரடங்கை நீக்கியமை குறித்து இம்ரான் கான் தொலைக்காட்சியில் உரையாடினார். அதில் அவர், ஊரடங்கால் பிற நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார இழப்புகளைப் போல் எமக்கும் ஏற்பட்டால் அதை எம்மால் சமாளிக்க முடியாது. இங்கு 2 கோடிக்கு அதிகமான தினக் கூலிகள் உள்ளனர். 5 கோடிக்கும் அதிகமானவர்கள் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளனர். எம்மால் மக்களுக்குத் தொடர்ந்தும் பணம் அளிக்க முடியாது. மக்கள் தத்தமது நலனில் அக்கறை எடுத்துக் கொள்ளவேண்டும் என்று தெரிவித்தார்.

## திறக்கப்பட்டது திருப்பதி



கொரோனா அச்சுறுத்தல் காரணமாகக் கடந்த மார்ச் மாதத்தில் இருந்து பக்தர்கள் அனுமதிக்கப்படாமல் மூடப்பட்டிருந்த திருப்பதி ஆலயமானது வழிபாட்டுக்காகத் திறக்கப்பட்டது. உள்ளூர் பக்தர்கள் வழிபடுவதற்கு ஆந்திர அரசு அனுமதி அளித்துள்ளது. முதற்கட்டப் பரிசோதனை முயற்சியாக உள்ளூர் பக்தர்கள் மட்டும் 6 அடி இடைவெளியைப் பேணியவாறு தரிசனம் செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. தனிநபர் இடைவெளியை கண்டிப்புடன் பின்பற்ற வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# இந்தியாவில் 2 லட்சத்தை நெருங்குகிறது கொரோனா



புதுடெல்லி,ஜூன் 02

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ளவர்கள் எண்ணிக்கை இரண்டு இலட்சத்தை எட்டும் தறுவாயில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்திய சுகாதார மற்றும் குடும்ப நலத்துறை வெளியிட்டுள்ள தரவுகளின்படி, இன்று காலை வரையான நிலைவரப்படி, இந்தியா முழுவதும் 1இலட்சத்து 98ஆயிரத்து 706 பேர் கோவிட் - 19 தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவர்களில் குணமடைந்தவர்கள் 95ஆயிரத்து 526 பேர். தொற்று உண்டானபின் ஒருவர் நாட்டைவிட்டு வெளியேறியுள்ளார். இது வரை இறந்தவர்கள் எண்ணிக்கை 5ஆயிரத்து 598பேராக உள்ளது. இந்தியா முழுவதும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருவோர் எண்ணிக்கை 97ஆயிரத்து 581 ஆகும். புதிதாக இந்தியாவில் 8ஆயிரத்து 392 பேருக்குக் கொரோனா பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இது தான் ஒரே நாளில் கோவிட் - 19 தொற்று எண்ணிகையில் உண்டான அதிகபட்ச உயர்வாகும். 70ஆயிரத்து 13 பேருக்கு கோவிட் - 19 உண்டாகியுள்ள மகாராஷ்ரா மாநிலமே இந்தியாவிலேயே கொரோனாவால் அதிகம் பாதிக்கப்பட்ட மாநிலமாக உள்ளது. மகாராஷ்ராவுக்கு அடுத்த இடங்களில் தமிழ்நாடு, டெல்லி, குஜராத், ராஜஸ்தான், மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேசம், மேற்கு வங்கம் ஆகிய மாநிலங்கள் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.



## கொரோனா பீடித்த குழந்தை பிழைத்தது

பிறேசிலில் பிறந்து சில மாதங்களே குழந்தை ஒன்றுக்குக் கொரோனா வைரஸ் பாதிப்பு ஏற்பட்டிருந்தது. அந்தக் குழந்தை 54 நாள்கள் வரை மருத்துவ சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டுத் தற்போது கொரோனாவின் பிடியிலிருந்து தப்பித்துள்ளது. டாம் என்ற இந்த ஆண் குழந்தை கொரோனா சிகிச்சைக்காக ரியோ டி ஜெனீரோநகரில்உள்ளபுரோகாா்டியாகோ மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு அதன் உடல்நிலை மோசமானதாக இருந்தது. நினைவிழந்தும் காணப்பட்டது. செயற்கைச் சுவாசக் கருவி பொருத்தப்பட்டது. இருப்பினும் தொடர்ந்து அளிக்கப்பட்ட சிகிச்சை பலனளித்ததால் குழந்தை கொரோனாவின் பிடியிலிருந்து தப்பித்துள்ளது.

## சென்னையில் கொரோனா உச்சம்



சென்னை,ஜூன் 02

தமிழகத்தின் சென்னையில் கொரோனா வைரஸ் பாதிப்பு உச்சமடைந்து வருகிறது. இதுகுறித்துத் தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி, அமைச்சர்கள், சென்னை மாநகராட்சி அதிகாரிகள், சென்னையின் பொறுப்பு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி வருகிறார் என்று இந்திய ஊடகங்கள்செய்தி வெளியிட்டன. தமிழகத்தில் சென்னையின் நிலை மிக மோசமாக உள்ளது. சென்னையில் 972 பேருக்குத் தொற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் சென்னையில் 14ஆயிரத்து 798பேராக இருந்த தொற்று எண்ணிக்கை 15ஆயிரத்து 770பேராக அதிகரித்துள்ளது. தமிழகத்தின் மொத்தத் தொற்று எண்ணிக்கை 23ஆயிரத்து 495பேரில் சென்னையில் மட்டும் 15ஆயிரத்து 770 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். இது மொத்தத் தமிழக எண்ணிக்கையில் 66. 26 சதவீதம் ஆகும். சென்னையின் தொற்று எண்ணிக்கையே தினமும் தமிழகத் தொற்று எண்ணிக்கையில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. உயிரிழந்த 184 பேரில் சென்னையைச் சேர்ந்த 138 பேர் அடங்குகின்றனர். இதனால் சென்னையின் கொரோனா தொற்றைக் கட்டுப்படுத்த தனிக்கவனம் செலுத்தப்படுகிறது என்று தெரிவிக்கப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு












# உலகம் முழுதும் பரவும் நீதி கோரும் போராட்டம்

கறுப்பினத்தவரான ஜோர்ஜ் பிளாய்ட்டின் சாவுக்கு நீதிகோரி அமெரிக்காவில் உச்சமடைந்துள்ள போராட்டங்கள் உலக நாடுகள் பலவற்றுக்கும் பரவ ஆரம்பித்துள்ளன. நேற்றைய தினம் பிரித்தானியா, ஜேர்மனி ஆகிய நாடுகளில் பேராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்த நிலையில் இன்று அயர்லாந்தின் டப்ளின், கனடாவின் டொராண்டோ, கனடர் கார்டிவப், வேல்ஸ், இத்தாலியின் மிலன், போலந்தின் கிராகோ, ஈரானிய நகரமான மாத், நியூசிலாந்தின் ஆக்லாந்து, வெலிங்டன் மற்றும் கிறிஸ்ட்சர்ச், வடக்கு மற்றும் தெற்குத் தீவுகள், பிறேசிலில் ரியோ டி ஜெனிரோ ஆகிய இடங்களில் ஜோர்ஜ் பிளாய்ட்டுக்கு நீதி கோரிய போராட்டங்கள் நடந்தன. இந்தப் போராட்டங்கள் குறித்த நகரங்களில் அமைந்துள்ள அமெரிக்கத் தூதரகங்களுக்கு முன்னால் சென்று நிறைவடைந்தன. ஈரானில் மாத்திரம் குழுவாக ஒன்றுகூடி ஜோர்ஜ் பிளாய்ட்டின் சாவுக்கு நிதி கோரி மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டது.

# ஒபாமா கண்டனம்

ஜோர்ஜ் பிளாய்ட் சாவுக்கு எதிராகச் சில போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபடுவதற்கு அமெரிக்காவின் முன்னாள் அதிபர் ஒபாமா கண்டனம் தெரிவித்தார். அத்தோடு போரட்டக்காரர்களின் கோரிக்கைகளை நிவர்த்தி செய்யக்கூடிய அரசியல் தீர்வுகளை அவர் கோரினார். அமெரிக்காவின் பல்வேறு இடங்களில் போராட்டங்கள் தொடர்ந்து வருகின்றன. இந்த நிலையில் இதுகுறித்து பாரக் ஒபாமா கூறும்போது, ‘வன்முறையை மன்னிக்கவோ, அதை நியாயப்படுத்தவோ அல்லது அதில் பங்கேற்கவோ கூடாது. போராட்டத்தின் நோக்கம் மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தி அநீதியை வெளிச்சத்துக்கு கொண்டு வர வேண்டும். இதனை நாம் சட்ட ரீதியாகத்தான் அணுக வேண்டும்’ - என்றார்.



# ஜோர்ஜ் பிளாய்ட்டின் சாவு ஒரு கொலையே

## பிரேத பரிசோதனை முடிவில் தகவல்




நியூயோர்க்,ஜூன் 02

அமெரிக்காவில் பொலிஸாரின் பிடியில் இறந்த கறுப்பினத்தைச் சேர்ந்த ஜோர்ஜ் பிளாய்ட்டின் சாவு ஒரு கொலை என அதிகாரபூர்வமாக வெளியாகியுள்ள பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் ஹென்னெபின் கவுண்டி மருத்துவ ஆய்வாளர் அலுவலகம் வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. இறந்தவரின் உடலில் இதய நோய் மற்றும் சமீபத்திய போதைப்பொருள் பயன்பாடு ஆகியவை கண்டறியப்பட்டுள்ளன எனவும் கூறப்பட்டுள்ளது. ஆனாலும் அவரது சாவு குறித்த பொலிஸ் அதிகாரியின் பிடியாலேயே ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஜோர்ஜ் பிளாய்ட்டின் உடலின் பின்பகுதி மற்றும் கழுத்து நசுக்கப்பட்டமையால், அவருக்கு மூச்சுத்திணறல் ஏற்பட்டுச் சாவு நிகழ்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஜோர்ஜ் பிளாய்ட் பொலிஸாரின் பிடியில் இருக்கும்போது, அவர்களது கட்டுப்பட வைக்கும் முயற்சியால் மாரடைப்பு ஏற்பட்டு இறந்ததார் என அவரது சாவு சட்ட ரீதியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது.



## கறுப்பினத்தவர் கொலை விவகாரம்

# 7ஆவது நாளாகப் பற்றி எரிகின்றன அமெரிக்காவின் பல மாகாணங்கள்

நியூயோர்க்,ஜூன் 02

கொரோனா வைரஸ் காரணமாக விதிக்கப்பட்டுள்ள ஊரடங்கு உத்தரவை மீறி அமெரிக்காவில் போராட்டங்கள் நடந்து வருகின்றன. ஜோர்ஜ் பிளாய்ட்டின் கொலையைக் கண்டித்து ஏழாவது நாளாக அங்கு நடக்கும் போராட்டங்களால் அமெரிக்காவின் பல மாகாணங்கள் பற்றி எரிகின்றன. கொரோனா பெருந்தொற்றுக்கு மத்தியிலும் அமெரிக்காவில் 75 நகரங்களில் போராட்டங்கள் நடக்கின்றன. 40 நகரங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. ஆனாலும் மக்கள் இந்த உத்தரவை மீறித் தங்களுடைய கோபத்தை வெளிப்படுத்தியபடி இருக்கிறார்கள். இது அமெரிக்கா முழுதும் பதற்றமான சூழலை ஏற்படுத்தியுள்ளது. நேற்றைய தினம் அமெரிக்க அதிபரின் வாசஸ்தலமான வெள்ளைமாளிகைக்கு முன்பாகப் போராட்டக்காரர்கள் ஆக்ரோசத்துடன் போராட்டத்தில் ஈடுபட்டமையால் அங்கிருந்த அமெரிக்க அதிபர் குறித்த வாசஸ்தலத்தில் அமைக்கப்பட்டுள்ள பதுங்கு குழிக்குள் சில மணிநேரம் வரை முடங்கியிருந்தார். இந்த நிலையில் வெள்ளை மாளிகைக்கு



அருகில் போராட்டக்காரர்கள் மீண்டும் குவிந்து, அங்கிருந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க ஜனாதிபதிகள் வழிபடும் தேவாலயம் உள்ளிட்ட கட்டடங்களுக்கு தீவைத்தனர். கலவரத் தடுப்பு அதிகாரிகள் மீது கற்களை வீசினர். பதிலுக்குப் பொலிஸார் கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசினர். இவ்வகைப் போராட்டங்கள் அமெரிக்காவின் அனைத்து மாகாணங்களிலும் பரவியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அமெ. பொலிஸார் பயமுறுத்துகின்றனர் நியூஸி. பிரதமர் ஜெசிந்தா தெரிவிப்பு

ஜோர்ஜ் பிளாய்டடின் சாவு குறித்துக் கருத்துத் தெரிவித்த நியூஸிலாந்தின் தலைமை அமைச்சர் ஜெசிந்தா ஆர்டர்ன், அந்தச் செயல் (பொலிஸ் அதிகாரி கழுத்தை நெரித்துக் கொன்றமை) தன்னை வெகுவாகப் பயமுறுத்துகிறது என்றார். இது தொடர்பாக நியூஸிலாந்தில் நடைபெற்ற போராட்டத்தையும் அவர் ஆதரித்தார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

‘போராடும் அனைவருடனும் நான் நிற்கிறேன். இது உண்மையில் பயங்கரம், நாம் பார்ப்பது, பார்த்துக் கொண்டிருப்பது பயங்கரம், நான் உண்மையில் பயந்து போய்விட்டேன்’ - என்றார்.

## கோழி இறைச்சி, முட்டை விலை திடீரென உயர்வு

கொழும்பு, ஜுன் 02

நாட்டின் பல இடங்களில் மேல் தோல் நீக்கிய ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சியின் விலை 630 ரூபாய் வரை அதிகரித்துள்ளது.

சில இடங்களில் ஒரு கிலோ கிராம் கோழி இறைச்சி 650 முதல் 700 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

இரண்டுவாரம் என்ற குறுகிய காலத்தில் 150 ரூபாவால் கோழி இறைச்சியின் விலை அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இரண்டு வாரங்ளுக்கு முன்னர் ஒரு கிலோகிராம் கோழி இறைச்சி 480 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்த விலையானது ஒரு வாரத்தில் 550 ரூபாவாக அதிகரித்தது. இதனையடுத்து அடுத்த சில தினங்களில் விலைகள் துரிதமாக அதிகரித்துள்ளதுடன் நேற்று 630 ரூபா வரை கோழி இறைச்சியின் விலை அதிகரித்திருந்தது.

ஊரடங்குச்சட்டம் அமுல்படுத்தப்பட்டிருந்த காலப்பகுதியில் கோழி உற்பத்தி வீழ்ச்சியடைந்து காணப்பட்டதுடன் தட்டுப்பாடும் நிலவியது.

அத்துடன் இறக்குமதி வரியும் அதிகரிக்கப்பட்டமை கோழி இறைச்சியின் விலை அதிகரிப்பு காரணம் எனக் கூறப்படுகிறது.

இதனிடையே ஒரு கோழி முட்டையின் விலை 20 ரூபாயாக அதிகரித்துள்ளது. இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஒரு முட்டை 13 முதல் 15 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டது.

கோழி இறைச்சி மற்றும் முட்டை என்பவற்றின் விலைகள் அடுத்த சில தினங்களில் மேலும் அதிகரிக்கலாம் எனச் சந்தை தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## யானைக்குப் போட்ட மின் வேலியில் சிக்கி மட்டு. விவசாயி பரிதாபச் சாவு

*மட்டக்களப்பு வெல்லாவெளி பிரதேசத்தில் மாட்டுபட்டியைப் பார்க்க சென்ற விவசாயி ஒருவர் வயல் பகுதியில் யானைகளைத் தடுக்க அமைக்கப்பட்டிருந்த மின்சார வேலியில் சிக்கி மின் தாக்கி உயிரிழந்தார்.*

*இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாக வெல்லாவெளி பொலிஸார் தெரிவித்தனர்.*

*தும்பங்கேணி திக்கோடையைச் சேர்ந்த 59 வயதுடைய சீனித்தம்பி சந்திரசேகரம் என்பவரே உயிரிழந்தார்.*

*வெல்லாவெளி பொலிஸ் பிரிவின் கீழ் உள்ள 39ஆம் கொலனியில் உள்ள வயலில் வேளாண்மையை யானைகளிடம் இருந்து பாதுகாக்க சிலவிவசாயிகள் ஒன்றிணைந்து சட்டவிரோதமாக அமைத்திருந்த மின்சார வேலியில் இவர் தெரியாமல் விழுந்ததால் இந்தச் சோகச் சம்பவம் இடம்பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.*

*இந்த மின்சார வேலிப் பகுதியில் குறித்த விவசாயின் மாட்டுபட்டி மற்றும் விவசாயம் அமைந்திருந்த நிலையில் இன்று அதிகாலை 2 மணியளவில் வீட்டில் இருந்து மாட்டுபட்டிக்கு சென்றிருந்த நிலையில் வயலை சுற்றி அமைக்கப்பட்டிருந்த முள்ளுக்கம்பியை பிடித்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார்.*

## பங்களாதேஷிலிருந்து நாட்டுக்கு திரும்பியோருக்கும் கொரோனா

பங்களாதேஷ் நாட்டில் இருந்து திரும்பியவர்களுக்கும் கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையில் நேற்று கண்டறியப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களில் 6 பேர் வெளிநாடுகளில் இருந்து வந்தவர்கள். அவர்களில் 4 பேர் பங்களாதேஷில் இருந்து வந்தவர்கள் என்கிறது சுகாதார அமைச்சு.

நேற்றுக் கண்டறியப்பட்டவர்களில் கடற்படையைச் சேர்ந்த இருவரும் அவர்களின் உறவினர்கள் இருவரும் அடங்குவர்.

இவர்களுடன் சேர்த்து மொத்தம் ஆயிரத்து 643 பேர் இப்போது இலங்கையில் தொற்றுக்குள்ளாகி இருக்கின்றனர். 821 பேர் வைத்தியசாலைகளில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருக்கின்றனர்.

மேலும் 65 பேர் நெருக்கமான மருத்துவக் கண்காணிப்பின் கீழ் வைக்கப்பட்டுள்ளார்கள்.

811 பேர் இதுவரையில் குணமடைந்து வைத்தியசாலைகளைவிட்டு வெளியேறி வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இதுவரையில் இலங்கையில் கொரோனாவால் 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

## உரும்பிராயில் இளைஞர் பொலிஸாரால் கைது

### ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டில்

யாழ்ப்பாணம், ஜுன் 02

ஹெரோயின் போதைப்பொருளை உடமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் உரும்பிராயைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும்பிராய் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருள் விற்பனை செய்யப்படுவதாக இரகசியத் தகவல் பொலிஸாருக்குக் கிடைத்துள்ளது.

இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் உரும்பிராய் செல்வபுரம் பகுதியைச் சேர்ந்த 19 வயது இளைஞனைக் கைது செய்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இளைஞனிடம் இருந்து 60 மில்லிக் கிராம் ஹெரோயின் போதைப் பொருளை மீட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கடந்த சில நாள்களாக ஹெரோயின் போதைப் பொருள்களுடன் இளைஞர்கள் தொடர்ச்சியாக கைது செய்யப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மாளிகாவத்தையில் சூடு; பிரதான சந்தேகநபர் கைது!

கொழும்பு, ஜுன் 02

மாளிகாவத்தை, லக்செத்த செவன தொடர் மாடிக் குடியிருப்பில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய மேலும் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

விசேட அதிரடிப்படை புலனாய்வுப் பிரிவினர் இவர்களைக் கைது செய்தனர்.

பிரதான சந்தேகநபர் நேற்றுமுன்தினம் இரவு கைது செய்யப்பட்டார்.

கொட்டாஞ்சேனை சுப்பர் மார்க்கெட் அருகே அவர் கைது செய்யப்பட்டார். மற்ற இரண்டு சந்தேக நபர்களைக் கொழும்பு குற்றப்பிரிவினர் மாளிகாவத்தையிலும், வெல்லம்பிட்டி பொலிஸ் பகுதியில் ஒருவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டபோது ஏற்பட்ட காயங்கள் காரணமாக சந்தேகநபர்களில் ஒருவர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டா. ஏனைய 3 மூன்று சந்தேக நபர்களும் இன்று நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikathir

பரிசளிப்பு



16 வயதிற்கு உட்பட்ட மாணவர்களுக்கு

தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

நாளைய (03.06.2020) தலைப்பு பரிசளிப்பு

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

## வற்றாப்பளை அம்மன் ஆலயத்தின் கடல்நீர் விளக்குக்கு தீர்த்தம் எடுப்பு

### பொலிஸார், படையினரின் பலத்த பாதுகாப்புடன்

வரலாற்று சிறப்பு மிக்க வற்றாப்பளை கண்ணகி அம்மன் ஆலய பொங்கல் நிகழ்வுக்காக சிலாவத்தைக் கடலில் தீர்த்தம் எடுக்கும் உற்சவம் படையினரின் பலத்த பாதுகாப்புடன் திங்கட்கிழமை இடம்பெற்றது.

முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் இருந்து தீர்த்தம் எடுக்கச் செல்லும் வழி எங்கும் பொலிஸார் மற்றும் தரைப் படையினர் பாதுகாப்பு வழங்கினர்.

கொரேனா வைரஸ் தொடர்பான சுகாதார அறிவுறுத்தல்களைப் பொலிஸார் ஊர்தியில் அறிவித்த வண்ணம் செல்ல பின்னால் பொலிஸாரின் பாதுகாப்புடன் தீர்த்தம் எடுப்பவர்கள் முள்ளியவளை காட்டா விநாயகர் ஆலயத்தில் இருந்து முல்லைத்தீவு தீர்த்தக்கரை நோக்கி பாத யாத்திரையாகச் சென்றனர்.

அவர்கள் தீர்த்தம் எடுக்கச் சென்றபோதும் திரும்பி வந்தபோதும் வீதிகளில் படையினர் பொலிஸார் நிறுத்தப்பட்டு சமூக இடைவெளி, பாதுகாப்பு என்பன உறுதிப்படுத்தப்பட்டன.

வழக்கமாக இவ்வாறு தீர்த்தம் எடுக்கச் செல்கையில் மக்கள் தமது வீடுகளின் முன்பாக நிறைகுடம் வைத்தும் தேங்காய் உடைத்தும் வழிபடுவார்கள்.

பாதுகாப்புக் கெடுபிடிகளால் இம்முறை அவை அனைத்தும் குறைவாகவே இடம்பெற்றன.

காட்டா விநாயகர் ஆலயத்திற்கு தீர்த்தம் எடுத்து வரப்பட்டதை அடுத்து இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 3 மணியளவில் மடப்பண்டம் எடுத்துவரப்பட்டு மடை பரவி தீர்த்த உப்புநீரில் விளக்கெரித்து விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றன

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரையான ஏழு நாட்கள் முள்ளியவளை காட்டுவிநாயகர் ஆலயத்தில் உப்புநீரில் விளக்கெரியும் அற்புதம் நிகழும். திங்கட்கிழமை அந்த விளக்கு காட்டா விநாயகர் ஆலயத்திலிருந்து வற்றாப்பளை அம்மன் ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு திங்கட்கிழமை பொங்கல் நிகழ்வு இடம்பெறும்.

## 5, 6 ஆம் திகதிகளில் மது கடைகள் பூட்டு

*இலங்கையில் பொசன் தினத்தை முன்னிட்டு அனைத்து மதுபான, இறைச்சிக் கடைகளும் சூதாட்ட விடுதிகள் மற்றும் இரவு விடுதிகளும் மூடப்படும் என்று மதுவரித் திணைக்களம் தெரிவித்துள்ளது.*

*பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ள சுற்றறிக்கையின்படி இந்த ஆண்டுக்கான பொசன் பௌர்ணமி போயா தினமாக அறிவிக்கப்பட்டுள்ளது.*

*எனவே மேற்கூறிய இடங்கள் மற்றும் பல்பொருள் அங்காடிகளில் இறைச்சி மற்றும் மதுபானங்களை விற்பனை செய்வது ஜுன் 5 மற்றும் 6ஆம் திகதிகளில் தடை செய்யப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.*

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி இருபது ஆண்டுகளைக் கடந்து வெற்றி நடை போடுகின்றது. அதைச் சிறப்பிக்கும் முகமாக இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

# 20 வயது இளமையில் யாழ். கல்வியியற் கல்லூரி

சண்.கஜேந்திரன்
(6ஆம் அணி முகிழ்நிலை ஆசிரியர்)

இன்று தனது இருபதாவது அகவையைப்பூர்த்தி செய்து இருபத்தொராவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறாள் எமதன்னை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி. இதுவரையில் சுமார் 8 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பல் துறை ஆசிரியர்களைச் சமூகத்துக்குத் தந்து பெருமையுடன் தனது பயணத்தைத் தொடர்கின்றாள். இராச வீதியில் கோப்பாயின் சிவந்த மண்ணில் விசாலமான கட்டடங்களுடன் காட்சி தரும் கல்லூரியின் தோற்றம், வளர்ச்சி மற்றும் அங்கே பேணிப் பாதுகாக்கப் படுகின்ற தமிழர்களின் கலை, கலாச்சாரம், பண்




பாடு போன்ற விடயங்களை இங்கு தரலாம் என்று விரும்புகின்றேன்.

### ஆரம்பம் - வளர்ச்சி

கல்லூரியின் ஆரம்பமும் வளர்ச்சியும் பெரும் இடரான காலத்தில் நடந்து முடிந்ததால் அதனைச் சற்று விரிவாகவும் ஏனையவை பொதுவாகவும் கூற முயல்வேன்.

யாழ்ப்பாணத்தில் ஆசிரியக் கல்வி யாழ்ப்பாண மாணவர்க்கு 2ஆயிரம் ஆண்டு வரை எட்டாக் கனியாகவே இருந்தது.க.பொ.த. உயர் தரம் கற்றவர்க்கிடையே வேலையில்லாப் பிரச்சினை இருந்தது. அதே நேரம் அங்கே ஆசி ரியர் பற்றாக் குறையும் கடுமையாக இருந்தது. அந்தக் காலத்தில் யாழ்ப்பாணப் பிரதேசத்தில் கடும் போர்ச் சூழல் நிலவியதால் கல்வியியற் கல்லூரியை யாரும் ஸ்தாபிக்க முயற்சிக்கவும் இல்லை. அதைப் பொறுப்பேற்க யாரும் தயாராக இருக்கவுமில்லை. தம்மை அதற்குள் உள்வாங்கி சிரமப்பட எவரும் ஆயத்தமாக இருக்கவில்லை. ஆனால் .பகுதி நேரத் தொழிலாக அதைப் பொறுப் பேற்றுத் தம்மைப் பாதுகாத்து லாபம் பெற்றுக் கொள்ளச் சிலர் விரும்பினர். கல்வி அமைச்சு அதற்கு ஒத்துக் கொள்ளாததால் கல்வியியற் கல்லூரி அங்கு எட்டாக் கனியாகவே தொடர்ந்தது. அரசும் கண்டும் காணாமலும் காலம் கடத்தியது. உலக வங்கி மட்டும் 460 மில்லியன் இலங்கை ரூபாவை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிக் கட்டடங்கள் நிறுவுவதற்கு ஒதுக்கி வைத்திருந்தது. அந்தப் பணம் நீண்ட காலம் பாவிக்கப்படாததால் அதில் பலருக்குக் கண் இருந்தமை வேறுகதை.

### ஆளுமை மிக்க பீடாதிபதி

இந்த நிலையிலேதான் கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன் துணிந்து தனித்துக் கல்லூரியை ஸ்தாபிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டார். தேசிய கல்வியியற் கல்லூரிகளின் பிரதம ஆணையாளர் நிஹால் ஹேரத் மற்றும் கல்வி அமைச்சின் செயலாளர் முன்னிலையில் பீடாதிபதிக்கான நியமனக் கடிதம் அன்றைய கல்வி அமைச்சர் கௌரவ.ரிச்சார்ட் பத்திரானவால் கலாநிதி.கமலநாதனுக்கு வழங்கப்பட்டது. இந்த நிகழ்வின் மூலம் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் முதலாவது பீடாதிபதியாகும் பேற்றை கலாநிதி. திருநாவுக்கரசு கமலநாதன் பெற்றார்.

### புதிய நடைமுறை

இலங்கையில் உள்ள ஏனைய 18 தேசியக் கல்வியியற் கல்லூரிகளின் ஸ்தாபிதத்தில் பின்பற்றப்படாத ஒரு புதிய நடைமுறை யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் ஸ்தாபித்ததில் பின்பற்றப் பட்டிருப்பதைக் கவனிக்க வேண்டும். அங்கெல்லாம் கட்டடங்கள் அமைத்து, ஆளணியினரை நியமித்து,வேண்டும் வளங்களையும் ஒழுங்கு செய்த பின்பே பீடாதிபதியை நியமித்து கல்லூரியைச் செயற்படுத்தினர். ஆனால் யாழ்ப்பாணம் தேசியக் கல்லூரியில் இந்த நடைமுறை மாறி முதலில் பீடாதிபதியை நியமித்து ஏனைய ஆளணியினரை, வளங்களை, கல்லூரிக்கான இடத்தைத் தேடும் பொறுப்பு அனைத்தையும் அவரே முடிவு செய்து கொள்ளுமாறு பணித்து நின்றனர். யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதிக்குப் பெரும் சவாலான பொறுப்பு. கல்லூரிக்கான இடம் இல்லை, தேவையான ஆளணியினர் இல்லை,தளபாடங்கள் இல்லை போக்குவரத்துக்கு எந்த வசதியும் இல்லை. இப்படிப் பல இல்லாமைகளுடன் கல்லூரியை ஸ்தாபிக்கும் பணியை ஆரம்பித்தவர்தான் முதலாவது பீடாதிபதி.

### உதவிகள் குவிந்தன

சமூகம் முன்வந்து உதவியது. சமூக ஆர்வலர் டாக்டர். லயன்.வை.தியாகராஜா பீடாதிபதியுடன் இணைந்து அவருக்குத் தோள் கொடுத்து உதவினார். இருவரும் இணைந்து பல வீடுகளின் படிகளில் ஏறிச் சமையல் பாத்திரங்கள்



மற்றும் ஏனைய சமையல் தளபாடங்களைப் பெற்றனர்.

கூட்டுறவுச் சங்கங்கள், மற்றும் பொது நிறுவனங்களை நாடித் தளபாட வசதிகளைப் பெற்றுக் கொண்டனர். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் அதிபர், விரிவுரையாளர், ஆசிரிய மாணவர் ஆகியோர் உதவியுடன் அங்கே ஓர் ஓரத்தில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி 2.5.2000 அன்று உதயமாகியது. யாழ்ப்பாணத்துக் கல்விச்



சமூகத்தினர், உயர் நிர்வாகக் கடமையாற்றுவோர், சமயப் பெரியோர், சமூக ஆர்வலர்கள். பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் எனப் பலரும் வருகை தந்து வாழ்த்தினர்.

### பிதா மகன்

மேற் கூறிய சாதனைகளால் கலாநிதி.திருநாவுக்கரசு கமலநாதன் அனைவர் மத்தியிலும் மதிப்புப் பெற்று பிதா மகன் என்று செல்லப் பெயராலும், கஷ்டமான சூழ்நிலையிலும் தளராது விடா முயற்சியுடன் கல்லூரியை அமைத்து நிலைநிறுத்தத் தனதுயிரைச் துச்சமென மதித்துப் பாடுபட்டதால் கல்லூரியின் ஸ்தாபககர்த்தா என்றும் அழைக்கப்பெற்றார்.

### இரண்டாவது பீடாதிபதி திரு எஸ்.கே. யோகநாதன்.

கலாநிதி.திருநாவுக்கரசு கமலநாதனைத் தொடர்ந்து பீடாதிபதிப் பதவி ஏற்றவர் திரு எஸ்.கே.யோகநாதன். முகிழ்நிலை ஆசிரியர்களின் ஒவ்வோர் அசைவையும் கூர்மையாக அவதானித்து வழிகாட்டும் திறன் கொண்டவர். சேமிப்பு, சிக்கனம், நெருக்கடியான நேரத்தில் எமது ஒவ்வொரு நடத்தையும் எவ்வாறு அமைதல் வேண்டும் என்பவற்றை நன்கு போதித்த ஆசான். கல்லூரி வளாகத்தை சோலைவனமாக்க முகிழ்நிலை ஆசிரியர்களையும் ஏனையோரையும் ஊக்குவித்தவர். கல்லூரி மாணவர்களின் பாவனைக்கு பேருந்து ஒன்றை கடும் முயற்சி செய்து தன்னார்வ உதவியாளர் மூலம் பெற்றுக் கொடுத்தவர். ஆசிரியர்

எப்பொழுதும் கற்றுக்கொண்டே இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துவார்.

மூன்றாவது பீடாதிபதி திரு,எஸ்.அமிர்தலிங்கம்.

திரு.எஸ்.கே.யோகநாதனைத் தொடர்ந்து பீடாதிபதியானவர் திரு.எஸ்.அமிர்தலிங்கம். அவர் கல்லூரி வளர்ச்சியிலும் மாணவர் நலனிலும் அக்கறை கொண்டு செயற்பட்டார். கல்லூரி வளங்கள் பாதுகாக்கப் படவேண்டும் என்பதில் அக்கறை கொண்டவர். அவர் காலத்தில் ஆண் முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான விடுதியொன்று அமைக்கப்பெற்றது. ஆசிரியர்கள் ஒழுக்கம் விழுப்பம் தரும், அதுவே கல்வி மேம்பாட்டுக்குப் பெரிதும் வேண்டப்படுகின்றது என்பதில் நம்பிக்கை உடையவர்.

### இன்றைய பீடாதிபதி.

மதிப்புக்குரிய திரு.எஸ்.பரமானந்தம் கல்லூரித் தாயின் இருபதாவது அகவைப் பூர்த்தியான காலத்தின் (இன்றைய) பீடாதிபதி. மிக அமைதியானவர். ஆழமான அறிவும் ஆற்றலும் கொண்டவர். பெரு மதிப்புக்குரிய உயர்திரு.மா.த.ந.வீரமணிஐயாவின் நினைவுப் பேருரை 2006 காலப்பகுதியில் நிகழ்த்த, அன்றைய பீடாதிபதி கலாநிதி.திருநாவுக்கரசு கமலநாதனால் ஒழுங்கு செய்யப்பட்டு, வருகை தந்து தமது பேருரையால் முகிழ் நிலை ஆசிரியர்களின் மனதில் நீங்கா இடத்தைப் பிடித்துக் கொண்டவர். அவருரையில் கூறிய கருத்துகள் இன்றும் எமது மனதில் உள்ளன.

தனது உயர் பண்பான அணுகு முறைகளால் மாணவர் மனதிலும், கல்வியியலாளர்,ஊழியர் மனதிலும் மதிப்புப் பெற்று கல்லூரியை உயர்வு நோக்கி இட்டுச் செல்கின்றார். அவரது உயர்வான அணுகு முறைகளும், புத்தாக்கச் சிந்தனைகளும், புரிதல் நடத்தைகளும் கல்லூரிக்கு வியத்தகு எதிர்காலத்தைப் பெற்றுத் தரும் என்ற நம்பிக்கையுடன், எமது அன்னைக் குப் பிறந்த நாள் வாழ்த்துகளைத் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**வாழ்க யாழ் கல்வியியற் கல்லூரி!-என்றும் சூழ்கநல் ஆசிரியக் கலைக் கல்வி பல்லூழி!**

## இலங்கை இரத்தினங்களுக்கு மவுசு!

கொரோனாவுக்குப் பிந்தைய வர்த்தக உலகில் இலங்கையின் இரத்தினக் கற்களுக்குப் பெரும் கேள்வி உண்டாகும் என்று கருதப்படுகிறது. சீனாவிலிருந்து இலங்கைக்கு வருகை தருகின்ற சுற்றுலாப் பயணிகள் தங்களின் விடுமுறை மற்றும் பயணச் செலவுகளை ஈடுசெய்வதற்காக இரத்தினங்கள் மற்றும் நகைகள் போன்ற உயர்தர பொருள்களை வாங்குபவர்களாகத் தங்களை மாற்றியிருக்கின்றனர், இது இலங்கை இரத்தினக்கல் மற்றும் நகைத் தொழிலுக்கு ஒரு பெரிய விற்பனை வாய்ப்பை உருவாக்குகிறது என்று சீனாவின் பன்னாட்டு வண்ண இரத்தினக்கல் சங்கத்தின் இயக்குநர் சென் ஐன் தெரிவித்தார்.

இலங்கையின் முதன்மையான இரத்தினக்கல், நகைக் காட்சி மற்றும் சந்தைத் தளமான FACETS ஆல் ஒழுங்குசெய்யப்பட்ட இணையக் கலந்துரையாடலில் 'கோவிட் – 19 தொற்றுநோயை அடுத்து உலகளாவிய ரத்தின மற்றும் நகைத் தொழிலின் மீட்பு மற்றும் எதிர்கால சாத்தியங்கள்' எனும் தொனிப் பொருளில் பேசியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

## உயிரிழந்த கருஞ்சிறுத்தையின் உடல் அருங்காட்சியகத்திற்கு

பொறியில் சிக்கிக் காயமடைந்த பின்னர் உயிரிழந்த அரியவகை கருஞ்சிறுத்தையின் உடல் பாடம் பண்ணப்பட்டு கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் வைக்கப்பட உள்ளது.

வனவிலங்குப் பாதுகாப்புத்துறை இயக்குநர் ஜெனரல் எம்.ஜி.சி.சூரியபந்தரா இதனைத் தெரிவித்தார்.

ஹட்டன், நல்லதண்ணியில் உள்ள லக்சபனா தோட்டத்தில் விவசாயி ஒருவர் வைத்திருந்த பெறியில் சிக்கி நிலையில் காயத்துடன் மீட்கப்பட்ட இந்தக் கருஞ்சிறுத்தை வன உயிரிகள் திணைக்களத்தினரால் பிடிக்கப்பட்டு சிகிச்சைக்காகக் கொண்டு செல்லப்பட்டது.

கால்நடை மருத்துவர்கள் சிகிச்சை வழங்கிக்கொண்டிருந்தபோதே கருஞ் சிறுத்தை இறந்துவிட்டது. அதன் உடல் தற்போது கொழும்பு தேசிய அருங்காட்சியகத்திற்கு அனுப்பப்பட உள்ளதாக வனவிலங்கு பாதுகாப்புத்துறை இயக்குநர் ஜெனரல் எம்.ஜி.சி. சூரியபந்தரா தெரிவித்தார்.

புத்த சாசன மற்றும் மத விவகார அமைச்சின் கோரிக்கையின் பேரில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகவும் சிறுத்தையின் இறப்புத் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் முடிந்ததும் சடலத்தை அருங்காட்சியகத்திற்கு அனுப்பும் முடிவு இறுதி செய்யப்படும் என்றும் அவர் கூறினார்.

மேலும், பேராதனை பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஒரு குழு சிறுத்தை பற்றி ஆய்வு செய்து டி.என்.ஏ பகுப்பாய்வு செய்ய உள்ளது, இது கருப்பு சிறுத்தை பற்றிய பல அறிவியல் தகவல்களைக் கண்டறிய உதவும் என்றும் அவர் கூறினார்.

# அமரர் ஆறுமுகனுக்கு அரசால் அவப்பெயர்!

## சஜித் அணி தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 02

**கொரோனா வைரஸ் நெருக்கடிக்கு மத்தியில் அரசு தேர்தல் இலாபம் கருதி செயற்பட்டு வருகின்றது. மக்கள் நலன் தொடர்பில் சிந்திக்காமல் அவர்களது அதிகரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவே முயற்சித்து வருகின்றது. இதனால் மறைந்த அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுக்கு ஓர் அவப்பெயரை அரச தரப்பினர் ஏற்படுத்தியுள்ளனர்.**



நாட்டுமக்கள் அனைவருமே கொரோனாத் தொற்று நீக்கம் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு செயற்படுகையில் இவர்களது செயற்பாடு நாட்டு மக்கள் அனைவருக்குமே சுகாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஐக்கிய தேசியக் கட்சியின் உண்மையான கொள்கையைக் கொண்டவர்களே சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியில் உறுப்புரிமை பெற்றுள்ளனர்.

தாங்களே ஐக்கிய தேசியக் கட்சி என்று கூறிக் கொள்ளும் தரப்பினரிடம் சிறிகொத்தவில் கட்டடம் மாத்திரமே இருக்கின்றது.

தற்போது ஐ.தே.கவின் ஆதரவாளர்கள் அனைவரும் ஐக்கிய மக்கள் சக்தியுடனேயே இணைந்துகொண்டுள்ளனர்.

தாங்கள் ஐ.தே.கவினர் என்று கூறிக் கொள்பவர்களுக்கு ஒவ்வொரு கிராமசேவகர் பிரிவிலிருந்தும் 10 ஆதரவாளர்கள்கூட கிடைக்க மாட்டார்கள். ஆனால், எம்முடன் பலகணக்கான ஆதரவாளர்கள் இணைந்து கொண்டுள்ளனர்.

இந்தநிலையில் இந்த ஐ.தே.க. தரப்பினர் எமக்கு ஆதரவளிக்கும் மாகாண சபை உறுப்பினர்கள், பிரதேச சபை உறுப்பினர்களுக்கு அச்சுறுத்தல் அளித்து வருகின்றனர் என்று பல்வேறு முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கின்றன.

இந்தக் குழுவினரால் எமது ஆதரவாளர்களுக்கு எந்தவித இடையூறும் ஏற்படுத்த நாங்கள் அனுமதிக்கமாட்டோம்.

ஐக்கிய மக்கள் சக்தி என்பது ஒரு கட்சியல்ல, மாபெரும் சக்தி. இந்நிலையில் மாகாண சபை மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களின் உறுப்புரிமை மற்றும் பதவியைப் பாதுகாப்பதற்காக நாங்கள் ஒருபோதும் பின்வாங்காமல் முன்னிற்போம்.

கொரோனா நெருக்கடிக்கு மத்தியில் அரசு தேர்தல் இலாபம் கருதிச் செயற்பட்டு வருகின்றது. மக்கள் நலன் தொடர்பில் சிந்திக்காமல் அவர்களது அதிகாரத்தைத் தக்கவைத்துக் கொள்ளவே முயற்சித்து வருகின்றது. இதனால் மறைந்த அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானுக்கு ஓர் அவப்பெயரை அரச தரப்பினர் ஏற்படுத்தியுள்ளனர். நாட்டு மக்கள் அனைவருமே கொரோனாத் தொற்று நீக்கம் சட்டத்துக்குக் கட்டுப்பட்டு செயற்படுகையில் இவர்களது செயற்பாடு நாட்டு மக்கள் அனைவருக்குமே சுகாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தநிலையில் ஒரு எதிர்கட்சிக்குரிய பொறுப்புக்களை யார் நிறைவேற்றுகின்றார்கள் என்பது தொடர்பில் மக்கள் அவதானத்துடனே இருக்கின்றார்கள் – என்றார்.

## இலங்கை இராணுவம் நிராகரித்தவருக்கு அமெ. இராணுவத்தில் முக்கிய இடம்

வாஷிங்ரன், ஜூன் 02

இலங்கை இராணுவத்தில் இணைத்துக்கொள்ளமுடியாது என இரண்டு தடவைகள் நிராகரிக்கப்பட்ட இலங்கையரான அனுஜ் பூஜித குணவர்த்தன, அமெரிக்காவின் முன்னணி ஹெலிக்கொப்டர் தாக்குததல் பிரிவில் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்.

அனுஜ் பூஜித இது தொடர்பில் தமது முகப்புத்தகத்தில் குறிப்பு ஒன்றைப் பதிவிட்டுள்ளார்.

18 வயதாக இருந்தபோது தாம் இலங்கை இராணுவத்தில் கடேற் அலுவலராக இணைவதற்காகச் சென்றபோது நிராகரிக்கப்பட்டார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

உரிய உடல் நிறை மற்றும் நெஞ்சின் அகலம் இல்லை என்பதன் காரணமாகவே தாம் நிராகரிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் படையினரின் சீருடையில் இருந்த தமது விருப்பம் காரணமாக மீண்டும் ஒரு வருடம் கழித்து தமது உடல்வாகுவை சரி செய்துகொண்டு சென்றபோதும் தாம் நிராகரிக்கப்பட்டார் என அனுஜ் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் குற்றப்புலனாய்வுத் துறைக்கு விண்ணப்பித்தபோது நேர்முகம் இல்லாமலேயே தமது விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதாக அனுஜ் கூறியுள்ளார்.

இதனையடுத்து இராணுவத்தின் சேரும் தமது ஆசைகளை விட்டு அமெரிக்கா செல்லக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அங்கு சென்று படித்துக் கொண்டிருந்தபோது அங்குள்ள இராணுவ அதிகாரிகள் அமெரிக்க இராணுவத்தில் மாணவர்களைச் சேர்த்துக் கொள்வது தொடர்பாகப் பேசிக்கொண்டிந்தனர்.

இதன்போது தன்னை அமெரிக்க இராணுவத்தில் இணையுமாறு கேட்கப்பட்டது. இதன்போது எவ்வித தயக்கமும் இன்றி தாம் அதற்கு உடன்பட்டதாக அனுஜ் தமது பேஸ்புக்கில் குறிப்பிட்டுள்ளார்.

இதன்பின்னர் எழுத்து மூலப்பரீட்சை மற்றும் உடல்பரிசோதனை என்பவற்றில் தாம் சித்தியடைந்தார் எனத் தெரிவித்துள்ள அனுஜ் தற்போது தாம் அமெரிக்க இராணுவத்தின் ஹெலிக்கொப்டர் முன்னணி தாக்குதல் பிரிவில் திருத்துநராகப் பணியாற்றுகிறார் எனக் குறிப்பிட்டுள்ளார்.

அனுஜ் கொழும்பு அசோகா கல்லூரியின் பழைய மாணவர். அத்துடன் கொழும்பு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்றவராவார்.

# 3 நாள்களில் மட்டும் 21 ஆயிரம் கையொப்பங்களை இட்டேன்!

## முன்னாள் ஜனாதிபதி வெளியிடும் தகவல்

கொழும்பு, ஜூன் 02

அர்ஜுன் மஹேந்திரனை இலங்கைக்கு கொண்டு வர 3 நாள்களில் 21 ஆயிரம் கையொப்பங்களை இட்டதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மஹேந்திரனை சிங்கப்பூரிலிருந்து இலங்கை அழைத்து வருவதற்காக நாட்டின் தலைவர் என்ற ரீதியில் தாம் மேற்கொண்ட முயற்சிகளை நேற்று முன்தினம் பொலன்னறுவையில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விவரித்தார்.

இதற்காக, சட்டமா அதிபர் வரைந்த ஆவணங்களில் தாம் 21 ஆயிரம் தடவைகள் கைச்சாத்திட்டார் எனவும், இதற்கு மூன்று நாள்கள் சென்றதாகவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.



முன்னாள் பிரதமர் மத்திய வங்கியின் ஆளுநர் பதவிக்கு சிங்கப்பூர் பிரஜையான அர்ஜுன் மஹேந்திரனை நியமித்தபோது, தாம் அதனை வலுவான முறையில் ஆட்சேபித்தார் என மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார்.

ஆட்சி அமைத்து, இரு வாரங்களுக்குள் தமக்கும் முன்னாள் பிரதமருக்கும் இடையில் பிணக்குகளை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என்பதற்காக அர்ஜுன் மஹேந்திரனின் நியமனத்தை ஏற்கும் நிர்ப்பந்தம் உருவானதாக அவர் மேலும் கூறினார்.

## இராணுவ தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் ஜெகத் பதவியேற்பு



ராணுவத்தின் தலைமை அதிகாரியாக மேஜர் ஜெனரல் ஜெகத் குணவர்த்தனே நேற்றுப் பதவியேற்றுக் கொண்டார்.

சில நாள்களுக்கு முன்னர் இராணுவத்தில் இருந்து ஓய்வு பெற்றுக்கொண்ட தலைமை அதிகாரிப் பதவியிலிருந்தவரான மேஜர் ஜெனரல் சத்தியப்பிரிய லியனகேவுக்குப் பதிலாக குணவரத்தனே நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்திற்கு முன்னதாக மேஜர் ஜெனரல் ஜெகத் குணவர்த்தனே இராணுவத் தொண்டர் படையணியின் கட்டளைத் தளபதியாகப் பதவி வகித்தார்.

தனது புதிய பதவியை ஏற்றுக்கொண்ட சில மணி நேரத்திலேயே இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வாவை அவர் மரியாதை நிமித்தம் சந்தித்துக் கலந்துரையாடினார். இராணுவத் தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு நடந்து.

எதிர்காலச் சவால்களை எதிர்கொள்வதற்கு ஏற்ற வகையில் இலங்கை இராணுவத்தைத் தயார்ப்படுத்துவது தொடர்பாக இந்தச் சந்திப்பின்போது ஆராயப்பட்டதாக இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.06.2020 இல் வெளியிடப்பெற்றது.